செ.வெ.எண்.47 நாள்: 14.06.2021

# தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மேலக்கூட்டுடன்காடு ஊராட்சியில் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமினை மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் துவக்கி வைத்தார்

---

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மேலக்கூட்டுடன்காடு ஊராட்சியில் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் துவக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.06.2021) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்துகொண்டு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமினை துவக்கி வைத்தார். ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சண்முகையா அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர் மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது வரை 150000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. தற்போது தூத்துக்குடி மாவட்டத்திற்கு 6000 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. அதனை எல்லா பகுதிகளுக்கும் பிரித்து அனுப்பப்பட்டு தடுப்பூசி போடும் பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகம் சுகாதார துறையும் மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ந்து தடுப்பூசி நமக்கு வந்துகொண்டு இருக்கிறது. தடுப்பூசி போடும் பணிகளும் தொடர்ந்து நடைபெறும். கொரோனா இல்லாத நிலைய உருவாக்க வேண்டும் என்பதே தமிழக முதல்வர் அவர்களின் நோக்கம் ஆகும். எனவே அனைவரும் தடுப்பூசி போட வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.போஸ்கோராஜா, முக்கிய பிரமுகர்கள் திரு.உமரிசங்கர், திரு.பில்லாஜெகன், திரு.ஜெயக்கொடி, திரு.சுப்பிரமணியன், திரு.ஹரிபாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.வசந்தா, வட்டார மருத்துவ அலுவலர் திருமதி.ஜெனிபர்வித்யா, சென்ட் ஜோசப் பள்ளி முதல்வர் பாதர் ரூபர்ட் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.